**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.**

**முன்னிலை : திரு.R. பாக்கியராஜ், B.A., B.L.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 09- ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.03/2025**

**CNR.No.TNKR11-000015-2025**

மலைக்கொழுந்தி க/பெ தங்கராஜு, வயது 65, இந்து, செக்கணம், திருக்காம்புலியூர் கிராம மஜரா, கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம். ...வாதிகள்

**//எதிர்//**

1.பெரியசாமி த/பெ சோழன் முத்திரியன், வயது 60, இந்து, செக்கணம், திருக்காம்புலியூர் கிராம மஜரா, கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.

2. வைரப்பெருமாள் த/பெ சோழன் முத்திரியன், வயது 60, இந்து, செக்கணம், திருக்காம்புலியூர் கிராம மஜரா, கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம். ...பிரதிவாதிகள்

தாவா சொத்தில் மாதிரி வரைபடத்தில் கண்ட சிகப்பு வண்ணமிட்ட பகுதியில் வாதி நடந்து சென்று அனுபோகம் செய்து வருவதையும், மாதிரி வரைபடத்தில் கண்ட மஞ்சள் வண்ணமிட்ட பகுதியினை இப்பிரதிவாதிகள் எவ்வித ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்கவும், வாதி அமைதியான முறையில் தாவா சொத்தினை அனுபோகம் செய்து வருவதை இப்பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ ஏஜண்டுகளா எந்நாளும் எக்காலத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று ஓர் நிரந்தர தடைஉறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் இந்த தாவா செலவு வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டியும் மற்றும் சமூகம் கோர்ட்டாரவர்களுக்கு தோன்றும் இதர யுக்தமான நியாயமான பரிகாரங்கள் வழங்க வேண்டியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தாவா தாக்கல் செய்த தேதி | : | 20.01.2025 |
| தாவா கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | : | 20.01.2025 |
| வழக்கு மூலம் | : | 10.01.2025 |
| இடம் | : | திருக்காம்புலியூர் கிராம மஜரா, கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம். |

தாவாவிற்கான நீதிமன்ற ஆள்வரைக்குமான பொருமானம் ரூ.1,000/-

தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 27 சி படி தாவா மதிப்பு ரூ.1000/−க்கு நீதிமன்ற கட்டணம் ரூ.30/− செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 09.03.2026ம் நாளன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கவின்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.தியாகு அவர்கள் முன்னிலையாகியும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பகரும்.

**தீர்ப்பாணை**

Plaintiff called absent. No representation for plaintiff. Today posted for trial(list). Suit is dismissed for default. No cost.

**சொத்து விவரம்**

கரூர் பதிவு மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கிருஷ்ணராயபுரம் சார்பகம், திருக்காம்புலியூர் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண். 387/1C4 (மூன்னூற்று எண்பத்தி ஏழு உட்பிரிவு ஒன்று சி நான்கு ) ஹெக்டேர் 0.52.5−க்கு ஏக்கர் 1.30ல் பெரியக்காள் நிலத்திற்கும் கிழக்கு, ரெத்தினகிரி நிலத்திற்கும் தெற்கு, மலையாண்டி நிலத்திற்கும் மேற்கு, எங்கள் இதர நிலத்திற்கும் வடக்கு இதில் ஏக்கர் 1.00 ஒரு ஏக்கர் நிலமும் இதைச் சேர்ந்த சுற்றுக்கால் பொழி தருசு மாமூல் தடநடைபாதை பாத்தியம் அதாவது மேற்படி நிலத்தின் மேல்புறம் ஓரத்தில் உங்கள் இதர நிலத்தின் வழியாக மேற்படி நிலத்திற்கும் தாங்கள் நடந்து கொள்ளும் பாத்தியம் உட்பட கிரையம்.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 09ம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.01 16:33:26 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**